# News Release

# நியூ இயர் லெவீ கவுண்ட் டவுன் தொடங்கிவிட்டது!

*ஜனவரி 19 அன்று கொண்டாடுவதற்கு மேயர் மற்றும் நகரவையுடன் இணையுங்கள்*

**வாகன், ஒன் (டிச. 16, 2024) -** மேயர் ஸ்டீவன் டெல் டூக்காவும் நகரவை உறுப்பினர்களும் இந்தப் புத்தாண்டை மூன்றாவது வருடாந்திர நியூ இயர் லெவீயின்போது அவர்களுடன் கொண்டாட அழைக்கின்றனர்.

இந்தக் கேளிக்கையான, குடும்பத்துக்கு ஏற்ற நிகழ்ச்சி ஜன. 19 ஞாயிறு அன்று காலை 9:30 முதல் மதியம்வரை 2800 ஹைவே 7-இல் அமைந்துள்ள வேணு ஈவண்ட் ஸ்பேஸ் எனும் இடத்தில் நடைபெற உள்ளது.

அன்பளிப்பாக வழங்கப்படும் சுவையான காலையுணவு, பொழுதுபோக்கு, செயல்பாடுகள், புகைப்பட சாவடி ஆகியவற்றை அனுபவிக்க வாருங்கள்.

நியூ இயர் லெவீ என்பது புத்தாண்டு தொடக்கத்தையும் வரவிருக்கும் நாட்களையும் கொண்டாடுவதற்காக சமூகத்தினரை ஒன்று சேர்க்கக்கூடிய செழுமையான பாரம்பரியமான நாளை மரியாதை செய்யக்கூடிய கூட்ட நிகழ்வாகும். மேலும் விபரங்களுக்கு, வருகை தாருங்கள் vaughan.ca/**festive**.

**மேற்கோள்**

”புத்தாண்டு என்பது கடந்த ஆண்டைப் பிரதிபலிக்கவும் வரவிருக்கும் ஆண்டுக்குத் தயாராவதற்கான நேரம். நகரவை உறுப்பினர்கள் சார்பாக ஜன. 19 அன்று வேணு ஈவண்ட் ஸ்பேஸ் என்ற இடத்தில் நடைபெற உள்ள மூன்றாவது வருடாந்திர நியூ இயர் லெவீ நிகழ்வில் எங்களுடன் கலந்துகொள்ள குடியிருப்போர் அனைவரையும் அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அன்பளிப்பாக வழங்கப்படும் சுவையான காலையுணவு அதேபோல குடும்பத்துக்கு ஏற்ற பொழுதுபோக்கு, செயல்பாடுகள் மற்றும் பலவற்றை அனுபவிக்க வாருங்கள். உங்கள் குடும்பத்தின் புத்தாண்டு பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக நமது லெவீயைக் கொண்டுவருவது குறித்து நீங்கள் பரிசீலிப்பீர்கள் என நம்புகிறேன். இது ரொம்பவே கேளிக்கை நிறைந்ததாய் இருக்கப்போகிறது. உங்களை அங்கு சந்திப்பதை எதிர்நோக்குகிறேன்!”
- மேயர் ஸ்டீவன் டெல் டூக்கா

**சுருக்கமான தகவல்கள்**

- நியூ இயர் லெவீ நிகழ்ச்சி ஜன. 19 ஞாயிறு அன்று காலை 9:30 முதல் மதியம்வரை 2800 ஹைவே 7-இல் அமைந்துள்ள வேணு ஈவண்ட் ஸ்பேஸ் எனும் இடத்தில் நடைபெற உள்ளது.
- இது வாகன் நகரத்தின் மூன்றாவது நியூ இயர் லெவீ.

**மேலும் அறிய**

- vaughan.ca/**festive**
- மேயர் டெல் டூக்காவின் உறுப்பினரின் தீர்மானம் (PDF)

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு:** கேதரின் பூஸ்கோயில், ஒருங்கிணைப்பாளர்
Communications, Marketing and Engagement Department
பேசி 416-931-1712 மின்னஞ்சல் katherine.bousquail@vaughan.ca